SEPT

# உயர்தர பாடசாலைப் பாடநெறிகளும் தெரிவுகளும் - பெற்றோருக்குச் சில உதவிக் குறிப்புகள்

## Tips for Parents: High School Courses and Choices – Tamil

உங்கள் பிள்ளையினுடைய கல்வியில் உங்கள் பங்களிப்பு அவர்கள் பாடசாலையில் சிறப்பாகச் செயற்பட கூடிய சாத்தியங்களை அதிகரிக்கச் செய்யலாம். உங்கள் பிள்ளையை உயர்தர பாடசாலைக்கு நீங்கள் தயார்ப் படுத்துதற்கு இங்கே உள்ள வினா விடைத்தாள் உதவும்.

### பெற்றோர்கள் எவ்விதத்தில் உதவலாம்?

உயர்தரப் பாடசாலைகளிலே உள்ள பிள்ளைகள் தமது பாடநெறிகளை வருடா வருடம் தெரிவு செய்வதற்குப் பெற்றோர் உதவ வேண்டும் என எதிர் பார்க்கப் படுகிறது. அங்கே பல்வேறு வகையான பாடநெறிகள் உள்ளமையால் இது ஒன்றும் சுலபமானதாக அமைவதில்லை. மாணவர்கள் தெரிவு செய்யும் பாட நெறிகள் உயர்தர வகுப்புகளிலேயும், உயர்தரப் பாடசாலையை விட்டு நீங்கிய பின்னரும் வரக் கூடிய வாய்ப்புக்களைப் பாதிக்கலாம்.

சில சமூகங்களிலே உள்ள 8ந் தர மாணவர்கள் வெவ்வேறான பாடநெறிகளும் மற்றும் செயல்த் திட்டங்ளும் உள்ள உயர்தரப் பாடசாலைகளுக்கிடையேயும் தெரிவு செய்ய வேண்டி உள்ளது.

உங்கள் மகனோ மகளோ ஒப்பமிடுதற்கான தாள் ஒன்றினை நீங்கள் ஒப்பமிடுதற்காகக் கொண்டு வருவார்கள். இத் தாளில் தெரிவுக்கான பாடநெறிகள் பட்டியலிடப் பட்டிருக்கும். இப்பட்டியலில் உள்ள பாட நெறிகளை உங்கள் பிள்ளையுடன் சேர்ந்து பார்வையிட்டு அவரின் தெரிவுகள் அவரது அக்கறைகளுக்கும் திறன்களுக்கும் வெகு பொருத்தமானவையா என்பதை உறுதி செய்வது மிக முக்கியமானது. அவரது தெரிவுகளை அங்கீகாரம் செய்வது உங்கள் பொறுப்பு.

தெரிவுகள் சிக்கலானவை போலத் தோன்றலாம் ஆனால் பாடசாலை வழிகாட்டி ஆலோசகர்கள் உங்களுக்கு வேண்டிய தகவலையும் ஆலோசனையையும் வழங்குவார்கள். பாடசாலைத் தெரிவுகள் பற்றிய தேவையான தகவலையும் பாடநெறிகளின் பட்டியலையும் பாடசாலைகளும் பாடசாலைச் சபைகளும் பிரசுரிக்கின்றன.

### ஒன்ராறியோவின் உயர்தரப் பாடசாலைப் பட்டதாரியாவதற்கு தேவையானவை ?

- 9 முதல் 12ந் தரங்களுக்கிடையே மாணவர்கள் 30 பாடநெறிகளில் சித்தியுற வேண்டும் ( பொதுவாக நான்கு அல்லது ஐந்து வருடங்களில் அவற்றினை பெற்று விட வேண்டும்).
- மாணவர்கள் 18 கட்டாய பாடநெறிகளிலும் 12 விருப்பத்துக்குரிய பாடநெறிகளிலும் கட்டாயமாகச் சித்தியடைய வேண்டும்.
- மாணவர்கள் கட்டாயமாக 40 மணித்தியாலம் சமூகசேவையாற்றியிருக்க வேண்டும்.
- மாணவர்கள் ஒன்ராறியோ இரண்டாம் நிலைப்பாடசாலை எழுத்தறிவுச் சோதனை அல்லது எழுத்தறிவுப் பாடநெறியில் சித்தியடைய வேண்டும்.

### 9ம் , 10 ந் தரங்களில் மாணவர்களுக்கு எத்தகைய தெரிவுகள் உள்ளன?

9ம், 10ந் தரங்களிலே ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், புவியியல், வரலாறு, உடற் கல்வி மற்றும் பிரஞ்சு மொழி உட்பட்ட கட்டாயமான பல பாட நெறிகளை மாணவர்கள் கற்கிறார்கள். கட்டாய பாடநெறிகளை வேறுபட்ட மூன்று துறைகளிலிருந்து அவர்கள் தெரிவு செய்ய முடியும். அம் மூன்றும், இடத்துக்கேற்ப விருத்தி ( Locally Developed) செய்தவை (பிரதானமானவை - Essentials எனவும் சில சமயங்களில் அழைக்கப்படுகின்றன) பிரயோகம் (Applied) அல்லது அறிவுசால் (Academic) துறைகள் ஆகும். உயர்தரப் பாடசாலைகள் யாவற்றிலும் எல்லாப் பாடநெறிகளும் மூன்று துறைகளிலும் கற்பிக்கப்படுவதில்லை. பாடநெறிகளை ஒன்றிற்கு மேற்பட்ட துறைகளிலிருந்து தெரீவு செய்ய முடியும். உதாரணமாக, மாணவர் ஒருவர் பிரயோக ஆங்கிலத்தையும் அறிவுசால் கணிதத்தையும் தெரிவு செய்ய முடியும். அதே சமயம். அவர்கள் விருப்பத்துக்குரிய பாடநெறிகளிலுமிருந்து (திறந்த பாடநெறிகள் என்பர்- Open courses) தமக்கு அக்கறையுடைய பாடங்களையும் தெரிவு செய்யலாம்

### 11ம், 12ந் தரங்களிலே மாணவர்களுக்கு எத்தகைய தெரிவுகள் உள்ளன?

உயர்தர பாடசாலைக் கல்வி முடித்த பின்னர் தமது இலக்குகட்டு ஆயத்தப் படுத்தக் கூடிய நான்கு துறைகளில் உள்ள பாட நெறிகளில் ஏதாவது ஒன்றினை மாணவர்கள் தெரிவு செய்வார்கள். அவர்கள் இலக்குகளாவன: வேலைத் தலம், கல்லூரி, பல்கலைக்கழகம்/கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் ஆகும்.

### 11ம், 12ந் தரங்களில் தெரிவு செய்வதற்கு ஏதாயினும் முன் நிபந்தனைப் பாட நெறிகள் உள்ளனவா?

உயர்தர வகுப்புகளிலே சில பாடநெறிகளை கற்பதாயின் மாணவர்கள் சில குறிப்பிட்ட பாடநெறிகளை அதற்கு முன்னரே கற்றிருக்க வேண்டும். உதாரணமாக, 11ந் தரத்தில் பல்கலைக்கழகத்து நெறியான பௌதிகம் கற்பதாயிருந்தால் அம்மாணவர் 10ந் தரத்தில் அறிவுசால் விஞ்ஞானம் கற்றிருக்க வேண்டும். 11ம் ,12 ந்தரங்களிலே மாணவர்கள் பல்கலைக்கழக மட்டப் பாட நெறிகள் கற்பதாயிருந்தால் அவர்கள் 9ம் ,10ந் தரங்களிலே அறிவுசால் பாடநெறிகளைக் கற்க வேண்டியது அவசியம். 10ந்தர பிரயோக பாடநெறிகளில் அதிகமானவை மாணவர்களைக் கல்லூரி மற்றும் கல்லூரி/பல்கலைக்கழக துறைகளுக்கு ஆயத்தப் படத்துகின்றன. இடத்துக்கேற்ப விருத்தி செய்த பாடநெறிகள் வேலைத்தல பாடநெறிகளைக் கற்கத் தயார்ப்படுத்துகின்றன.

## பாடநெறிகள் எந்கே கொண்டு செல்கின்றன?




## மாணவர் ஒரு துறையிலிருந்து இன்னொரு துறையினுக்கு மாறமுடியுமா?

சில சமயங்களில் மாணவர்கள் ஒரு வகைப் பாட நெறியிலிருந்து இன்னோர் வகையினுக்கு மாறலாம். அப்பொழுது அவர் ஒரு பாடநெறியினைத் திரும்பவும் கற்க வேண்டும் அல்லது துறை மாற்றும் பாட நெறி ஒன்றினைக் கற்க வேண்டும். துறைமாற்றும் பாடநெறிகளை ஒன்றில் கோடை கால பாடசாலையில் கற்கலாம் அல்லது சுயாதீனமாகக் கற்கும் பாடநெறிகளாகக் கற்கலாம்.

## பிள்ளைகள் நல்ல தெரிவுகளைப் செய்வதற்குப் பெற்றோர் எவ்வகையில் உதவலாம்?

- உயர்தரப் பாடசாலைக்கல்வியை முடித்ததும் உங்கள் பிள்ளை என்ன செய்யவுள்ளார் என்பது பற்றி அவரோடு கதையுங்கள்.
- உங்கள் பிள்ளையினுடைய ஆசிரியரிடமிருந்து அல்லது கல்விச் சபை இணைய தளத்திலிருந்து கல்விச் சபையினது பாடநெறி விவரக் குறிப்பினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் பாடநெறி அட்டவணைகளின் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். பாடசாலைகளினது இணையதளத்திலிருந்து பாடசாலைகள் பற்றிய விபரங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். எல்லாப் பாடசாலைகளும் ஒரே வகையான துறைகளையும் பாட நெறிகளையும் கொண்டிருப்பதில்லை.
- உயர்தர பாடசாலையின் திறந்த இல்ல நிகழ்வுகளுக்குச் செல்லுங்கள். சில பாடசாலைகளில் மொழி பெயர்ப்பாளர் இருப்பார்கள்.
- உங்கள் பிள்ளையினுடைய அக்கறைகள், ஆர்வம் மற்றும் திறன்களுக்கு ஏற்றவாறு தெரிவுகளைச் செய்வதற்கு உதவுதற்காக வழிகாட்டி ஆலோசகருடன், உப - அதிபருடன் அல்லது அதிபருடன் ஒரு நேரத்தை ஒதுக்கித் தருமாறு கேளுங்கள்.

## மேலும் தகவல்களை பெற்றோர்கள் வேறு எங்கே இருந்து பெற பெறமுடியும்?

- உங்கள் கல்விச் சபையின் இணைய தளத்தினைப் பாருங்கள்.
- ஒன்ராறியோ கல்வி அமைச்சு
  http://www.edu.gov.on.ca/eng/document/curricul/secondary/oss/oss.html
- புதிதாக வந்தோருக்கான இரண்டாம் நிலைப் பாடசாலை வழிகாட்டி http://www.settlement.org/site/edguide

## புதிய உயர்தரப் பாடசாலை ஒன்றினைப் பற்றிப் பெற்றோர்கள் கேட்க கூடிய கேள்விகள் யாவை?

- 9ம் ,10ம் தரங்களிலே எவ்வகையான பாட நெறிகளைக் கற்பிக்கின்றீர்கள்? உங்களிடம் அறிவுசால், பிரயோக மற்றும் இடத்துக்கேற்ப விருத்தி செய்த பாட நெறிகள் உள்ளனவா? எப்பாடங்களில் உள்ளன?
- எவ்வகையான விருப்பத்துக்குரிய பாட நெறிகளைக் கற்பிக்கிறீர்கள்? (உ.ம். கணினி வலை மனையாக்கல், குடும்பக் கல்வி, மொழிகள்)
- 11ம், 12ந் தரங்களிலே எவ்வகையான பாட நெறிகளைக் கற்பிக்கிறீர்கள்? உங்களிடம் வேலைத்தல, கல்லூரி, கல்லூரி/ பல்கலைக்கழகம், பல்கலைக்கழகப் பாடநெறிகள் உள்ளனவா? என்ன பாடங்களில் உள்ளன?
- போதிய அளவு மாணவர்கள் பதிவு செய்யாவிட்டால் ஏதாவது பாட நெறிகள் கற்பிக்கப் படாமல் விடுவதற்கு வாய்ப்புண்டா ? அவை யாவை?

## ஆங்கிலம் இரண்டாம் மொழியாக கற்பித்தல் சம்பந்தமாகப் பெற்றோர்கள் கேட்கக் கூடிய கேள்விகள் யாவை?

- ESL பாடநெறிகள் எல்லா ஐந்து திறன் மட்டங்களிலும் உங்களிடம் உண்டா?
- ESL பாடநெறிகள் ஏனைய பாடங்களில் உங்களிடம் உண்டா? (உ.ம் . ESL வரலாறு)

## விசேட கல்வி உதவி பற்றி பெற்றோர்கள் கேட்கக் கூடிய கேள்விகள் யாவை?

- எவ்வகையான விசேட தேவைகளுக்கு உங்கள் பாடசாலையால் உதவி தர முடியும்?
- உங்கள் பாடசாலையில் உள்ள மூலவளங்கள் எவை? (உ.ம். ஊழியர், செயல் திட்டங்கள், விசேட பாடநெறிகள்)
- விசேட தேவை மாணவர்களுக்கு எத்தகைய பாடநெறிகள் உள்ளன?
- இவை தனிப் பட்ட பாடநெறிகளா அல்லது அவை ஒரு பாடநெறியிலே வித்தியாசமான தரமட்டத்திலே ஒருங்கிணைக்கப்பட்ட பாடநெறிகளா ? (உ.ம் இடத்திற்கேற்ப விருத்தி செய்த பாடநெறியினைப் பிரயோக பாடநெறியினுடன் சேர்த்துப் போதித்தல்.)


This information sheet was prepared by
**People for Education**. www.peopleforeducation.com and **Settlement and Education Partnerships in Toronto** www.settlement.org/edguide